## மொழிச் சான்றிதழ்

- Telc A1-C2 (ஐரோப்பிய மொழிச் சான்றிதழ்கள)
  Telc-சான்றிதழ்கள் மொழித் திறனை உறுதிப்படுத்துவதுடன் சுவிசில் உள்ள அரச திணைக்களங்கள் மற்றும் தொழில் செய்யும், இடங்கள் அதேபோன்று உயர் கல்வி பயிலும் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் இவை அங்கீகரிக்கப்படுகின்றன.
- A2-வாய்மொழி மூலமான அத்தாட்சிப் பத்திரம்
  கடின நிலைமைகளுடன் கூடிய விண்ணப்பத்தினைப் பரிசீலிக்கும்போது A2-வாய்மொழித்தகுதிச் சான்றிதழுடன் இணைத்து 280 மொழிக்கற்கைநெறிப் பாடங்களுக்கு சென்று பங்கு பற்றியமையை உறுதிப்படுத்தினால் Graubünden இல் உள்ள இதற்குப் பொறுப்பான அரச திணைக்களம் இதனை அங்கீகரிக்கின்றது.

## மேற்கொண்டு மொழிக் கற்கை நெறிகளை தொடர்வதற்கான முன்நிபந்தனைகள

மேற்கொண்டு மொழிக் கற்கை நெறி ஒன்றைத் தொடர்வதற்கு நீங்கள்,

- கற்கை நெறிகளுக்கு ஒழுங்காகச் செல்லவேண்டும் (ஆகக் குறைந்தது 80%).
- வீட்டுப்பாடங்களை செய்துமுடிக்க வேண்டும்.
- பாடசாலை ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.
- ஆசிரியரின் சிபார்சுடன் கல்வி கற்கும் இலக்குகளை அடைந்து கொள்ளவேண்டும்.
- A2-Telc-பரீட்சையில் சித்திபெற வேண்டும்
  > பரீட்சையில் 48 தொடக்கம் 60 வரையிலான புள்ளிகள் பெற்றால் நீங்கள் B1-கற்கை நெறிக்கு செல்ல முடியும்.
  > பரீட்சையில் 36 தொடக்கம் 47,5 வரையிலான புள்ளிகள் பெற்றால் நீங்கள் A2/B1 -கற்கை நெறிக்கு செல்ல முடியும்.

பரீட்சையில் மீண்டுமொரு தடவை தோன்றுவதற்கு நீங்கள் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டும்.

அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் மற்றும் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டுள்ள நபர்கள் தொழிலில் முன்றேுவதற்கான ஊக்குவிப்புத் திட்டம்.

# மொழிக்கான கற்கை நெறிகள்




Fachstelle Integration Graubünden
Post spezialisà per l'integraziun dal Grischun
Servizio specializzato per l'integrazione dei Grigioni




**Tamil**


Grabenstrasse 1
7001 Chur

081 257 26 38

www.hallo.gr.ch
www.fluechtlinge.gr.ch




# மொழிக்கான கற்கை நெறிகள்

## சலுகை/கற்கை நெறி தராதரம்

கட்டாய தகுதிகாண் பரீட்சை

| கற்கை நெறி தராதரம் | உங்களுக்கு... |
|---|---|
| Alpha | இதுவரை லத்தீன் எழுத்து பற்றிய அறிவு எதுவும் இல்லை |
| A01/02 | இதுவரை மொழிஅறிவு எதுவும் இல்லை |
| A03 | இதுவரை சிறிதளவு மொழிஅறிவே உள்ளது |

| கற்கை நெறி தராதரம் | நீங்கள் கற்பது |
|---|---|
| A1 | பூர்வீகம், குடும்பம், வசிப்பிடம் போன்ற விடயங்களை இலகுவான வசனங்களாகக் பேசுவதற்காகும |
| A2 | சொந்தத் தேவைகளைத் தெரிவித்துக் கொள்வதற்கும் நீங்களாவே சாதாரண அன்றாட நிலைமைகளை புரிந்துகொள்வதற்குமாகும் |
| B1 | அன்றாடவாழ்விலும் தொழிலிலும் ஒன்றுடனொன்று தொடர்புள்ள நம்பிக்கையான விடயங்கள் குறித்து பேசுவதற்கும் அனுபவங்களை விளக்குவதற்குமாகும் |

அன்றாட விடயங்கள்- மற்றும் ஒருங்கிணைந்து வாழ்தல் பற்றிய கற்கைநெறிக்கு செல்லும்போது, நீங்கள் கலந்துரையாடும் நபர்களுடன் ஆறுதலாகவும் தெளிவாகவும் பேசும் பட்சத்தில், உங்களது சொந்த வாழ்க்கைச் சூழல் குறித்து சாதாரண முறையில் உங்களால் புரிந்து கொள்ள முடியும்.

## நோக்கம்

நீங்கள் டொச் மொழியைக் கற்பது ஏனெனில்:

- அன்றாட வாழ்வை சரிவர புரிந்துகொள்வதற்காக.
- தொடர்புகளை ஏற்படுத்தி கலந்துரையாடுவதற்காக.
- தொழில் உலகில் நுழைந்து கொள்வதுடன் தொழில் ரீதியான தகமையை கற்றுக்கொள்வதற்குமாகும்.

## பிள்ளைகள் பராமரிப்பு

5 வயது வரையான பிள்ளைகள் மொழிக்கற்கை நெறிக் காலத்தில் (B1 வரை) உங்களது பிள்ளைகள ஒரு விளையாட்டுக்குழுவில் பராமரிக்கப்படுவார்கள்.

## பிரயாணச்செலவுகள்

வெளியிடங்களில் கற்கை நெறி வசதி கிடைத்து அங்கு பயணம் செய்வதற்கென ஆகக் குறைந்த கட்டணப் பயணச்சீட்டுக்கான கூப்பனை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.